©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 42] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 30, 2013
ஐப்பசி 13, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2044

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

**கடித எண் 1586/மொ.பெ/2013, நாள் 11–9–2013.**

*[தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, அரசாணை (24) எண். 4, 9, ஜனவரி 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 9–5–2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு 2ல், 193 முதல் 194 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட II (2)/LE/241/2007 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவனையின் (1) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல்பொருள் தயாரிப்புத் தொழிலில் உள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும் பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

### விவர அட்டவணை

**தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகை*<br>*(1)* | *நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்*<br>*(2)*<br>(ரூபாய் காசுகள்) |
|---|---|
| **விலங்கின் ரோமத்தை நீக்குகிற பகுதி** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) தோலை பளபளபாக்குபவர் | 67.00 |
| (3) 3 ஸ்கட்டர்கள் | 67.00 |
| (4) 4 ஆட்டின் தோலை உரிப்பவர் | 67.00 |

| *பணியாளர்களின் வகை*<br>*(1)* | *நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்*<br>*(2)*<br>(ரூபாய் காசுகள்) |
|---|---|
| **தோல் பதனிடுதல் மற்றும் சாயம் தோய்க்கும் பிரிவு** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) கொள்கலன் எடுத்துச் செல்பவர்கள் | 66.00 |
| (3) ரோமம் நீக்குபவர்கள் | 69.00 |
| (4) மயிரிழையைப் பகுப்பவர்கள் | 69.00 |
| (5) ரோமம் நீக்க கற்றுக்கொள்பவர் | 66.00 |
| (6) பாமிங் உதவியாளர்கள் | 66.00 |
| **சீரமைக்கும் பிரிவு** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) இயந்திரத்தை இயக்குபவர் | 66.00 |
| (3) கையினால் சீரமைக்கும் | 66.00 |
| **அடுக்கி வைக்கும் பிரிவு** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) பஸ்டர்கள் | 66.00 |
| (3) அடுக்கி வைப்பவர்கள் | 66.00 |
| **இறுத்தெடுக்கும் பிரிவு** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) இறுத்தெடுப்பவர்கள் | 66.00 |
| **பணி நிறைவுப் பிரிவு** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) பதப்படுத்துபவர்கள் | 66.00 |
| (3) தெளிப்பவர்கள் | 66.00 |
| **பணி நிறைவு பணியாளர் பிரிவு** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) முரட்டுத்தோல் இயந்திரத்தை இயக்குபவர் | 66.00 |
| (3) சாணைக்கல் சக்கரத்தை இயக்குபவர் | 66.00 |
| (4) பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர் | 66.00 |
| (5) சீராக்குபவர்கள் | 66.00 |
| (6) அழுத்துகிற இயந்திரத்தை இயக்குபவர்கள் | 66.00 |
| (7) கைகளினால் சலவை செய்பவர்கள் | 66.00 |
| (8) தாடை ரோமம் நீக்குபவர்கள் | 66.00 |
| (9) பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர்கள் | 68.00 |
| **பௌண்டரி பிரிவு** | |
| (1) உதவி செய்பவர்கள் | 66.00 |
| (2) பொருத்துநர்கள் | 68.00 |
| (3) ஓட்டுநர்கள் | 70.00 |
| (4) கல் தச்சர் | 68.50 |
| (5) தச்சர்கள் | 68.50 |
| (6) பொருத்துநர்கள், ஓட்டுநர்கள் (கற்றுக்கொள்பவர்கள்) | 66.00 |

| *பணியாளர்களின் வகை* | *நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|
| *(1)* | *(2)* (ரூபாய் காசுகள்) |
| **புழக்கடை பிரிவு** | |
| (1) டீமர்கள் | **66.00** |
| (2) சீரமைப்பவர்கள் | **66.00** |
| **பொது** | |
| (1) மேஸ்திரிகள் | **2060.00** / மாதம் ஒன்றுக்கு |
| (2) எழுத்தாளர்கள்/காசாளர்கள் | **2060.00** / மாதம் ஒன்றுக்கு |
| (3) காவலாள் | **2021.00**/ மாதம் ஒன்றுக்கு |

**ஏனைய தோல் பதனீட்டு தொழிற்சாலைகள்**

(i) விலங்கின் ரோமத்தை நீக்குகிற குழியில் அல்லது தோலை நீக்குகிற குழியில் தோல் மற்றும் உரிவைகளைப் பதனிடுவதற்கு, முதல் யூனிட்டுக்கு ரூபாய் **22.63** காசுகள் மற்றும் வேலை செய்யப்படுகிற ஒவ்வொரு கூடுதல் யூனிட்டிற்கும் ரூபாய் **2.36** காசுகள் வீதம் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

(ii) பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கு ரூபாய் **66.00** வழங்கப்பட வேண்டும்.

**செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறுகிற தொழிலாளர்கள்:**

விலங்கின் ரோமத்தை நீக்குகிற அல்லது தோலை நீக்குகிற குழியில் முதல் யூனிட்டைப் பொறுத்த வரையில், செய்யப்பட்ட வேலைக்காக, ரூபாய் **35.36** காசுகளும், வேலை செய்யப்படுகிற ஒவ்வொரு கூடுதல் யூனிட்டிற்கும் ரூபாய் **2.36** காசுகள் வீதமும் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**தோல் பதனீட்டு தொழிற்சாலைகளில் மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் உள்ள பொதுவான வகைகள்**

(1) எழுத்தர்/காசாளர் – மாதமொன்றுக்கு ரூபாய் **2060.00**

(2) மேஸ்திரிகள் அல்லது மேற்பார்வையாளர்கள் – மாதமொன்றுக்கு ரூபாய் **2060.00**

(3) காவலாள் – மாதமொன்றுக்கு ரூபாய் **2021.00**

**விளக்கங்கள்**

மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்படப்பட்டவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும்.

(i) அகவிலைப்படியைக் கணக்கிடுவதற்காக, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண் 2174 அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படும். (அதாவது 1960 = –100 என்பதன் அடிப்படையில்) 2174 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் நாளொன்றுக்கு 3 காசுகள் (மூன்று காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(iii) ஏதேனும் தோல் பதனீட்டு தொழிற்சாலை மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறுகிற தொழிலாளர்களை பணியில் அமர்த்துகிறவிடத்து, வழக்கமான வேலை நாள் ஒன்றுக்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குகிற ஊதியம், அந்த வகையினருக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைவிட குறைவாக இருக்கக்கூடாது.

(iv) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(V) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(vi) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்.**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு) துறை.*

*[அரசாணை (2D) எண் 5, தொழிலாளர்–வேலைவாய்ப்பு (J2)த் துறை, 9–1–2013.]*

தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கையினால் மேற்கொள்ளப்படும் பூவேலைபாடு மற்றும் சரிகைத் தொழிலில் உள்ள வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948)–இன் கீழ் குறைந்தளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கருதுவதால்,

எனவே, தற்போது, மேற்சொன்ன சட்டத்தின் 27 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன பிரிவில் தேவைப்படுகிறவாறு மேற்சொன்ன சட்டத்தின் விவர அட்டவணையின் பாகம்–I–ல் மேற்சொன்ன வேலைவாய்ப்பைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கம்பற்றி இதனால் தெரிவிக்கிறார்.

இந்த அறிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு முன்னர், உத்தேசிக்கப்பட்டுள்ள சேர்க்கை குறித்து பெறப்படும் யாதொரு மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும். மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின் அவற்றை, தேனாம்பேட்டை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு முதன்மைச் செயலாளர் தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்.**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்புத்) துறை.*

*[அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 4–2–2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும் மேற்படி சட்டத்தின் 9 ஆம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், நூற்பு, நெசவு ஆலைகள், நூற்பாலைகள், நெசவாலைகள், மோட்டா ரக நூல், உற்பத்தி செய்யும் சாதாரண ஆலை உட்பட துணி ஆலைகள் மற்றும் மேற்சொன்ன துணி ஆலைகளில் தனியாக அல்லது ஒன்றாக சேர்ந்து (தொழில் பழகுநர்கள் நீங்கலாக) பஞ்சடிக்கும் அறை, சிக்கெடுத்தல், நூலிழுத்தல், கைநாடா சட்டங்கள், நூற்றல், சுருளாகச் சுற்றுதல், மடித்தல், சுற்றுதல், சிப்பம் செய்தல், பாவு போடுதல், கஞ்சியிடுதல்மற்றும் ஏனைய செய்முறைகள் போன்ற பல்வேறு செய்முறைகளில் பணியிலமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது தொடர்பாக, விசாரணைகள் நடத்தி, மாநில அரசுக்கு ஆலோசனை அளிப்பதற்காக, பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை இதனால் நியமிக்கிறார்–

**தனிநபர்கள்:–**

| | | |
|---|---|---|
| (1) தொழிலாளர் நல துணை ஆணையாளர், கோயம்புத்தூர் | – | *தலைவர்.* |
| (2) தொழிலாளர் நல உதவி ஆணையாளர் கோயம்புத்தூர். | – | *செயலாளர்* |
| (3) உதவி இயக்குநர் பொருளாதாரம் மற்றும் புள்ளி விவரயியல் இயக்குநர் அலுவலகம், சென்னை–600 006. | – | *உறுப்பினர்* |

**தொழிலதிபர்களின் பிரதிநிதிகள்**

(1) முனைவர் கே. வெங்கடாச்சலம் — *உறுப்பினர்*
தலைமை ஆலோசகர், தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கம்,
கதவு எண் 2, கரூர் சாலை,
பெஸ்சி கல்லூரி அருகில் மாடர்ன் நகர், திண்டுக்கல்–624 001.

(2) திரு. எஸ். தினகரன், — *உறுப்பினர்*
இணை மேலாண்மை இயக்குநர்,
சம்பந்தம் நூற்பாலைகள் நிறுவனம் (EFSI),
எண் 1, காமராஜ் நகர் குடியிருப்பு,
சேலம்–636 014.

(3) திரு. எஸ்.எம். சிவா, — *உறுப்பினர்*
முதுநிலை மேலாளர்,
தி லட்சுமி மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
பழைய எண் 96, புதிய எண் 4,
நாயக்கர் மேற்கு தெரு, சிங்காநல்லூர்,
கோயம்புத்தூர்–641 005.

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள்:**

(1) திரு. வி.கே. தனகோபாலன், — *உறுப்பினர்*
அண்ணா தொழிற்சங்கம்,
எண் 1 A 7, கே.கே. புதூர் பாதை,
எண் 2, வேலாண்டிபாளையம் அருகில், கோயம்புத்தூர்–25.

(2) திரு. வி.ஆர். பாலசுந்தரம், — *உறுப்பினர்*
இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்,
எண் 1848 திருச்சி சாலை,
இராமநாதபுரம், கோயம்புத்தூர்–641 045.

(3) திரு. டி. பொன்பாண்டி, — *உறுப்பினர்*
தூத்துக்குடி மதுரா கோட்ஸ்,
செயலாளர்,
அண்ணா துணிநூல், தொழிலாளர் சங்கம்,
த/பெ. துரைராஜ்,
எண் 2 A/352, அம்மன் கோயில் தெரு,
மடத்தூர், தூத்துக்குடி.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிப்பெயர்ப்பு)த் துறை.*

*அரசாணை (2D) எண் 10, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1) துறை, 12–3–2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 19–11–2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு 2இல் 379 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II/(2)தொ.வே.வா./547/2008 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் அப்பளம் தயாரிக்கும் தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, இந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பபட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

## அப்பளம் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு

| *பணியாளர்களின் வகைகள்* *(1)* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* *(2)* மண்டலம்—I ரூ. காசு | மண்டலம்—II ரூ. காசு |
|---|---|---|
| 1. சிப்பம் செய்பவர் | 2898.00 மாதம் ஒன்றுக்கு | 2793.00 மாதம் ஒன்றுக்கு |
| 2. கணக்காளர் | 2995.00 மாதம் ஒன்றுக்கு | 2898.00 மாதம் ஒன்றுக்கு |
| 3. எடை போடுபவர்/ உதவியாளர் | 2898.00 மாதம் ஒன்றுக்கு | 2793.00 மாதம் ஒன்றுக்கு |
| 4. நறுக்குதல் (100 கிலோ கிராம் ஒன்றுக்கு) | 237.90 | 179.33 |
| 5. கலவையாக்குதல் (100 கிலோ கிராம் ஒன்றுக்கு) | 278.16 | 204.96 |
| 6. அப்பளம் தயாரிக்கும் தொழிற்சாலை | | |
| (i) அப்பளங்கள் (3 அங்குலம் அல்லது 7.6 செ.மீ (விட்டம்) 100 எண்ணிக்கை (300 கிராம்) | 4.61 | 3.31 |
| (ii) அப்பளங்கள் (4 அங்குலம் அல்லது 10.2 செ.மீ (விட்டம்) 100 எண்ணிக்கை (400 கிராம்) | 5.89 | 4.34 |
| (iii) அப்பளங்கள் (5 அங்குலம் அல்லது 12.7 செ.மீ (விட்டம்) 100 எண்ணிக்கை (500 கிராம்) | 8.71 | 6.41 |
| (iv) அப்பளங்கள் (6 அங்குலம் அல்லது 15.2 செ.மீ (விட்டம்) 100 எண்ணிக்கை (700 கிராம்) | 9.73 | 7.19 |

### விளக்கங்கள்

(1) மண்டலம் I மற்றும் மண்டலம் II கீழ்க்கண்ட பகுதிகளைக் கொண்டுள்ளன.

மண்டலம்-I: சிறப்பு மற்றும் தேர்வுநிலை நகரியங்கள் உட்பட அனைத்து மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை மற்றும் தேர்வுநிலை நகராட்சிகள்.

மண்டலம்-II: ஏனைய இடங்கள்

**(2) அகவிலைப்படி:—**

பணியாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் கீழேகுறிப்பிடப்பட்ட அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சாராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணுடன் (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) இணைக்கப்பட்டுள்ளது. 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு கூடுதலாக ரூ. 5.85 காசுகள் (ஐந்து ரூபாய் மற்றும் எண்பத்தைந்து காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

*(ii)* அகவிலைப்படியானது, முந்தைய 12 மாதங்களுக்கான, அதாவது ஜனவரியிலிருந்து, டிசம்பர் வரையிலான சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்விதப் பாகுபாடும் காட்டக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(3) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிப் பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 20, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J1) துறை, 21–3–2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னர், 1–2–2006 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2–ல் 68–69 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே./68/2006 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டு தமிழ்நாடு மாநிலத்தில் தீப்பெட்டி தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும் பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பபட்டுள்ளது.

**விவர அட்டவணை**

**தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிலில் பணிபுரிபவர்கள்**

| தொழிலாளர்களின் வகைகள் (1) | குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (2) |
|---|---|
| | ரூ. காசு |
| **1. வகை–I** | 95.00 நாள் ஒன்றுக்கு |
| மருந்து தோய்ப்பவர் / இரசாயனக் கலவை / மெழுகு / பாரபைன் மெழுகு இவற்றில் தோய்த்தல்: பொருத்துபவர், முதலாள், மரமறுக்கும் கருவி இயக்குபவர், மரத்துண்டுகளை வெட்டும் கருவி இயக்குபவர், பட்டைச் சில்லுகளாக உரிக்கும் கருவி இயக்குபவர். | |
| **2. வகை–II** | 82.00 நாள் ஒன்றுக்கு |
| தீப்பெட்டியின் ஓரங்களில் மருந்து கலவை பூசுபவர், 10 எண்கள், 100 எண்கள் கொண்ட கட்டுகளாகக் கட்டுபவர்கள், ஆயத்தீர்வை முத்திரைத்தாள் சீட்டுசுற்றும் பணியை (Band rolling) சரிபார்ப்பவர்கள், தீப்பெட்டிகளில் குச்சிகளை நிரப்பும் பணியைச் சரிபார்ப்பவர்கள், தாள்களை வெட்டுபவர்கள் | |
| **3. வகை–III** | 81.00 நாள் ஒன்றுக்கு |
| இரசாயன மருந்துக்கலவையை அரைப்பவர்கள், தீக்குச்சி நிரம்பிய வரிச்சட்டங்களை தீப்பெட்டியின் அடுக்குகளைச் சமச்சீராக்குதல் (Frame and box leveling), வெட்டி ஒட்டுபவர்கள், மரம் வெட்டுபவர்கள், இரசாயனக் கலவையை சமச்சீராக்குபவர்கள், அடுக்குகளில் கட்டுகளை அடுக்கிவைப்பவர்கள் மூட்டைகளாக (bundle) கட்டுபவர்கள் | |
| **4. வகை–IV** | 79.00 நாள் ஒன்றுக்கு |
| துடைப்பவர்கள்/காவலாள்/ஏவலாட்கள்/அலுவலகப் பையன்கள், வரிச்சட்டங்களை வாங்குபவர்கள்/வரிச்சட்டங்களை கொடுப்பவர்கள் மற்றும் பயிற்சிபெறாத ஏனைய தொழிலாளர்கள், கலவையில் தோய்த்தல். | |
| எழுத்தர் அல்லது மேற்பார்வையாளர் | 2478.00 மாதமொன்றுக்கு |

**(5) தீப்பெட்டி தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு செய்யும் வேலைக்கேற்ப ஊதியம்:**

| **பணி வகைகள்** | |
|---|---|
| (1) தீப்பெட்டிகளில் தீக்குச்சிகளை நிரப்புதல் (50 குச்சிகள் கொண்டவை) | 100 தீப்பெட்டிகளுக்கு ரூ.3.17 |
| (2) தீப்பெட்டிகளுக்கு ஆயத்தீர்வை முத்திரைத்தாள் சீட்டு சுற்றுதலும், பெயர்ச்சீட்டு ஒட்டுதலும். | 100 தீப்பெட்டிகளுக்கு ரூ.1.43 |
| (3) மேல்பெட்டி தயாரித்தல் | 100 பெட்டிகளுக்கு ரூ.1.07 |
| (4) உள்பெட்டி தயாரித்தல் | 100 பெட்டிகளுக்கு ரூ.3.04 |
| (5) 43.18 செ.மீ அளவுள்ள வரிச்சட்டத்தில் குச்சிகளை அடுக்குதல் } (6) 53.34 செ.மீ அளவுள்ள வரிச்சட்டத்தில் குச்சிகளை அடுக்குதல் | 52 வரிகள் கொண்ட ஒரு வரிச்சட்டத்திற்கு ரூ.3.54 |
| (7) ஆயத்தீர்வை முத்திரைத்தாள் சீட்டு சுற்றுதல் (அட்டைப்பெட்டிகளுக்கு மட்டும்) | 100 பெட்டிகளுக்கு ரூ.0.87 |

**6. மத்தாப்பு தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு செய்யும் வேலைக்கேற்ற ஊதியம்:**

| *பணிவகைகள்* (1) | *சாதாரணமானவை* (2) | *டீலக்ஸ்* (3) |
|---|---|---|
| (1) மத்தாப்பு பெட்டிகளில் குச்சிகளை நிரப்புதல் (10) குச்சிகள் கொண்டவை) மத்தாப்பு பெட்டிகள் | 100 பெட்டிகளுக்கு ரூ.2.53 | 100 பெட்டிகளுக்கு ரூ.2.53 |
| (2) மத்தாப்பு பெட்டிகளுக்கு ஆயத்தீர்வை முத்திரைத்தாள் சீட்டு சுற்றுதலும், பெயர் சீட்டு ஒட்டுதலும். | 100 பெட்டிகளுக்கு ரூ.1.43 | – |
| (3) மேல்பெட்டி தயாரித்தல் | 100 பெட்டிகளுக்கு ரூ.1.07 | |
| (4) உள்பெட்டி தயாரித்தல் | 100 பெட்டிகளுக்கு ரூ.3.04 | |
| (5) 48.18 செ.மீ அளவுள்ள வரிச்சட்டத்தில் குச்சிகளை அடுக்குதல் | 52 வரிகள் கொண்ட ஒரு வரிச்சட்டத்திற்கு ரூ.3.54 | |
| (6) 53.34 செ. அளவுள்ள வரிச்சட்டத்தில் குச்சிகளை அடுக்குதல் | 52 வரிகள் கொண்ட ஒரு வரிச்சட்டத்திற்கு ரூ.3.54 | |
| (7) ஆயத்தீர்வை முத்திரைத்தாள் சீட்டு சுற்றுதல் (அட்டைப்பெட்டிகளுக்கு மட்டும்) | 100 பெட்டிகளுக்கு ரூ.0.87 | |

**விளக்கங்கள்:—**

(1) **அகவிலைப்படி:—**மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியத்துடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, 16 காசுகள் (பதினாறு காசுகள் மட்டும்) என்ற வீதத்தில் கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைக்குறியீட்டு எண் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) அகவிலைபடியின் முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணின் அடிப்படையில், இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறும் தொழிலாளர்களை பொறுத்தவரையில், அகவிலைப்படி வழங்குவது நாளொன்றிற்கு எட்டு மணி நேர பணி என்ற நிபந்தனைகளுக்குப்பட்டிருக்கும், செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறும் தொழிலாளர்கள் நாளொன்றிற்கு, எட்டு மணி நேரத்திற்கும் குறைவாக பணியாற்ற இருப்பின், அவர்களுக்கு அதற்கேற்ற வீதத்தில் அகவிலைப்படி வழங்கத்தக்கதாகும்.

**3.** ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை **26** ஆல் வகுக்க வேண்டும்.

**4.** பணியின்தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

**5.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் இடங்களிளெல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிப் பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.